RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 218 | ஆகஸ்டு.13 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றம்

சென்னை: ஆக.13-

அதிமுக, பாஜக, பாமக ஆகிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வர் விஜய் கொண்டுவந்த தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று (ஆக.12) தொகுதி மறுவரையறைக்கு எதிராக முதல்வர் விஜய் தனித் தீர்மானத்தை கொண்டு வந்து உரையாற்றினார். இதைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்கள் காரசார விவாதம் நடத்தினார்கள்.

“தொகுதி மறுவரையறையில் எக்காரணம் கொண்டும் தமிழகம் பாதிக்கப்படக் கூடாது என்பதே திமுகவின் உறுதியான நிலைப்பாடு. திமுகவை பொறுத்தவரை பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக ஆதரிக்கிறோம்” என சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

பின்னர், “நாடாளுமன்றத்தில் தொகுதிமறுவரையறை மசோதா தாக்கல் செய்வதற்கான எந்த அறிகுறியும் இல்லாத நிலையில், அரசியல் காரணங்களுக்காக பரபரப்பை ஏற்படுத்தும் வகையில் தவெக அரசு அவசர அவசரமாக தனி தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது. தொகுதி மறுவரையறை தமிழகத்துக்கு சாதகமாக உள்ளதா? பாதகமாக உள்ளதா? எனத் தெரியாமல் அரசியல் காரணங்களுக்காக தமிழக அரசு கொண்டு வந்துள்ள தீர்மானத்தை அதிமுக எதிர்க்கிறது.

அரசியல் காரணங்களுக்காக தவெக அரசு இந்த தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது; அதிமுக இதை நிராகரிக்கிறது,” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, “தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதாவுக்கு ஒன்றிய அரசு சட்ட முன்வடிவு கொண்டு வராத நிலையில், எதன் அடிப்படையில் தனித்தீர்மானம் சரியாக இருக்கும்,” என தேதிமுக எம்எல்ஏ பிரேமலதா விஜயகாந்த் கேள்வி எழுப்பினார்.



“தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா ஏற்கெனவே தெளிவுபடுத்தி விட்டார். முதல்வர் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை திரும்ப பெற வேண்டும். தொகுதி மறுவரையறைக்கு எதிரான தனித்தீர்மானத்தை ஆதரவிக்கவில்லை,” என பாமக எம்எல்ஏ கணேஷ் குமார் எதிர்ப்பு தெரிவித்தார்.

“மாற்றம் வேண்டும் என்று மக்கள் கருதிய காரணத்தால்தான் நீங்கள் இப்போது ஆட்சியில் இருக்குறீர்கள். காலப்போக்கில் தேவையான, ஆக்கப்பூர்வமான மாற்றத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசினர் தனித் தீர்மானத்தை எதிர்த்து, தொகுதி மறுவரையறையை கட்சிகள் ஏற்க வேண்டும்,” என பாஜக எம்எல்ஏ போஜராஜன் தெரிவித்தார்.

“தொகுதி மறுவரையறையால் தமிழகத்தின் எம்.பிக்கள் எண்ணிக்கை குறையும். ஆனால் உத்தரப் பிரதேசம் போன்ற பெரிய வடமாநில எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரித்து அவர்களே பிரதமர்களாகவும், கேபினட் அமைச்சர்களாகவும் வர வாய்ப்பு ஏற்படும். முதல்வர் கொண்டு வந்த தீர்மானம் தற்போது அவசியமானது. பிரதமர் மோடி, நாடாளுமன்றத்தில் ஒன்றும், வெளியும் வெவ்வேறாக பேசுகிறார். இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்மானத்தை வரவேற்கிறோம்” என விசிக அமைச்சர் வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

பின்னர் சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், “தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது. தொகுதி மறுவரையறை சம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை” என்றார்.பின்னர் சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், “தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது. தொகுதி மறுவரையறை சம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை” என்றார்.

சிபிஎம் எம்எல்ஏ செல்லசாமி பேசுகையில், “தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனதார ஆதரிக்கிறது. தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கூடாது. தொகுதி மறுவரையறை சம்மந்தமாக அனைத்து கட்சிகளுடனும், மாநிலங்களுடனும் பாஜக பேசிய பிறகுதான், முடிவெடுக்க வேண்டும். தமிழகத்தின் இடைநிலை தொகுதிகளை குறைப்பதுதான் பாஜவின் நோக்கம். மக்கள் தொகை கணக்கெடுப்புக்கும், மகளிர் இட ஒதுக்கீட்டுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை” என்றார்.

அமைச்சர் ஷாஜகான் (ஐயூஎம்எல்) பேசும்போது, “பாஜகவின் தீர்மானங்கள் நாட்டு மக்களின் குரலுக்கு மதிப்பு அளிக்காமல், தங்களின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உள்ளது. மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை ஐயூஎம்எல் கட்சி ஆதரிக்கிறது” என்று கூறினார்.

அதிமுக, பாஜக,பாமக ஆகிய கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயூஎம்எல் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் முதல்வரின் தனித் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டது. தேமுதிக தனது நிலைப்பாட்டை சரியாக சொல்லவில்லை.

## சிவகங்கை அருகே 70 ஆண்டுகளாக பட்டா இன்றி வசிக்கும் ஆதிதிராவிடர் மக்கள்

சிவகங்கை: ஆக.13-

சிவகங்கை அருகே 70 ஆண்டுகளாக ஆதிதிராவிடர் குடும்பத்தினர் பட்டா கிடைக்காமல் பரிதவிக்கின்றனர். நில வகைப்பாட்டை மாற்றுவதில் அதிகாரிகள் தொடர்ந்து மெத்தனம் காட்டுவதாகப் புகார் எழுந்துள்ளது.

சிவகங்கை அருகே அரசனி முத்துப்பட்டி ஊராட்சி நெம்மேனி கிராமத்தில் 30க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் 70 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதியில் வீடு கட்டிக் குடியிருந்து வருகின்றனர்.

அங்கு அரசு அங்கன்வாடி மையம், கோயில் போன்றவை கட்டப்பட்டுள்ளன. அந்தக் கிராம மக்கள் வசிக்கும் பகுதி வருவாய்த் துறை ஆவணத்தில் களத்துப் பொட்டல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், அங்குள்ள வீடுகளுக்கு பட்டா இல்லை. சிலர் வங்கிக் கடன் பெற்று வீடு கட்ட முடியாமல் ஓட்டு வீடுகளிலேயே வசிக்கின்றனர்.

இதையடுத்து, நில வகைப்பாட்டை மாற்றி பட்டா வழங்குமாறு கிராம நிர்வாக அலுவலர் முதல் தமிழக முதல்வர் வரை பலமுறை மனுக் கொடுத்தும் நடவடிக்கை இல்லாததால் கிராம மக்கள் வேதனையில் உள்ளனர்.

மேலும், அக்கிராமத்துக்குச் செல்லும் சாலை சேதமடைந்து மிகவும் மோசமாக உள்ளதால் இருசக்கர வாகனங்களில் செல்வோர் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றனர்.

இது குறித்து அப்பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் கூறியதாவது: 70 ஆண்டுகளாக இங்குதான் குடியி ருக்கிறோம். எங்கள் பகுதியை தவறுதலாக ஆவணத்தில் களத்துப் பொட்டல் எனக் குறிப்பிட்டுள்ளனர். இதனால், பட்டா பெற முடியவில்லை.

மனு கொடுக்கும் சமயங்களில் மட்டும் எங்கள் கிராமத்தை அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டா கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகின்றனர். அதன் பின்னர், கண்டுகொள்வதில்லை.

இன்னும் எத்தனை தலைமுறைதான் பட்டாவுக்காக காத்திருக்க வேண்டியநிலை உள்ளதோ தெரியவில்லை. மிக மோசமாக உள்ள சாலையையும் சீரமைக்காமல் உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இது குறித்து வருவாய்த்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘நில வகைப்பாட்டை மாற்றி பட்டா கொடுப்பது தொடர்பாக அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளோம். நில வகைப்பாட்டை மாற்றி அறிவிப்பு வந்ததும் பட்டாக்கள் வழங்கப்படும்’ என்றனர்.

## “எனக்கு மொழிப் பிரச்சினை இருப்பதும், அன்று ஆவேசப்பட்டதும் உண்மையே” : பேரவையில் மரிய வில்சன் விவரிப்பு

சென்னை: ஆக.13-

“எனக்கு மொழிப் பிரச்சினை இருப்பது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. அன்று கொஞ்சம் ஆவேசப்பட்டது உண்மைதான். எனக்கும் தாய்மொழி தமிழ்தான்” எனத் தெரிவித்த தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன், தனக்கு திருவாரூர், புதுச்சேரி, சென்னை, ஆர்.கே.நகர் ஆகிய 4 இடங்களுடன் உள்ள தொடர்பையும் விவரித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு தமிழக சட்டப்பேரவையில் நிதியமைச்சர் மரிய வில்சனின் தமிழ் உச்சரிப்பு மற்றும் இலக்கணப் பிழை தொடர்பாக,



கடையநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ ராஜேந்திரன் மற்றும் நிதியமைச்சர் மரிய வில்சன் இடையே காரசார விவாதம் நடைபெற்று, பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து இன்று சட்டப்பேரவையில் மரிய வில்சன் பேசுகையில், “முந்தைய நிதியமைச்சர் பிடிஆரையும், என்னையும் ஒப்பிட்டுப் பேசினார்கள். நாங்களும் இது குறித்து விவாதித்தோம். மொழி எனக்கு ஒரு பிரச்சினைதான். அதை நான் மறுக்கவில்லை. அன்று கொஞ்சம் ஆவேசப்பட்டது உண்மைதான். எனக்கும் தாய்மொழி தமிழ்தான்.

நான் வளர்ந்தது திருவாரூர், பிறந்தது புதுச்சேரி. படித்தது சென்னை. என்னை இப்போது தத்தெடுத்தது ஆர்.கே.நகர். இந்த நான்கு இடத்திலும் நான் சுற்றி சுற்றி வந்திருக்கிறேன்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் நிறைய பேர் பேசினார்கள். அவை அனைத்தும் எங்களுக்கு தகவல்தான். நான் அதை மறுக்கவில்லை. இந்த இடம் எங்களுக்கு முதல் முறை. சில விஷயங்களை திருத்திக் கொள்வோம். உங்களிடமிருந்தும் கற்றுக் கொள்வோம்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், “நிதியமைச்சராக பொறுப்பேற்ற முதல் நாளே கடந்த திமுக ஆட்சியில் அரசுத் துறைகளின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்து விரிவான அறிக்கை தயார் செய்ய முதல்வர் எனக்கு உத்தரவிட்டார்.

மூன்று துறைகளின் வரவு செலவு கணக்கு குறித்த விரிவான அறிக்கை தயார் செய்யப்பட்டு முதல்வர் மேசையில் உள்ளது. அரசுக்கு இழப்பை பொறுத்தவரை சில லட்சங்கள் முதல் பல ஆயிரம் கோடிகளில் இருக்கலாம். அந்த அறிக்கையை முதல்வர் எப்போது வேண்டுமானாலும் வெளியிடுவார்” என்று அவர் கூறினார்.

## பழநி நில மோசடி வழக்கு: சார் பதிவாளர், இடைத்தரகர் ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி

பழநி: ஆக.13-

பழநி கோயில் மடத்திற்கு சொந்தமான நிலத்தை மோசடியாக பத்திரப் பதிவு செய்த வழக்கில் கைது செய்யட்ட சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், இடைத்தரகர் ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் இன்று திண்டுக்கல் நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம் பழநி மடம் நில மோசடி வழக்கில் 11 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதில் சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், இடைத்தரகர் ஜெயப்பிரகாஷ், நிலத்தை வாங்கிய சேதுபதி, வெள்ளைத் துரை, மடம் நிர்வாகி முருகதாஸ் ஆகியோரை சிபிசிஐடி போலீஸார் கைது செய்து விசாரித்தனர். இதில் முருகதாஸ், சேதுபதி, வெள்ளைத்துரை ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில் சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், இடைத்தரகர் ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் ஜாமீன் மனுக்கள் மீதான விசாரணை இன்று (புதன் கிழமை) திண்டுக்கல் ஜே.எம். 1 நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் பாக்கியராஜ் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுவை விசாரித்த மாஜிஸ்திரேட் பாக்கியராஜ் இருவரது மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

இந்நிலையில் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## எம்எல்ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ரூ.828 கோடி விடுவித்து அரசாணை

சென்னை: ஆக.13-

எம்எல்ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதிக்காக 2026-27 நிதியாண்டுக்காக ரூ.828 கோடி நிதி ஒப்புதல் அளித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் ஒவ்வொரு தொகுதிக்கும் சட்டப்பேரவை தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி வீதம் மொத்தம் ரூ.702 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது.

இந்நிலையில், சட்டப் பேரவை உறுப்பினர்களால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளுக்கான 18 சதவீத ஜிஎஸ்டி செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொண்டு, அதற்கான நிதியையும் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசிடம் பரிந்துரைத்தார்.




அவரது கருத்துருவை பரிசீலனை செய்து ஊரக வளர்ச்சித் துறை செயலர் பிரசாந்த் மு.வடநெரே வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.3.54 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்காக மாநிலத்தின் அனைத்து தொகுதிகளுக்கும் சேர்த்து 2026 27ம் ஆண்டுக்கு மொத்தம் ரூ.828.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதனை விடுவிக்க அதற்கான நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.


இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் புதிய பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

முந்தைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு நிதியை செலவிடக் கூடாது. ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கும், சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## மெரினா கடற்கரை உட்பட 44 இடங்களில் இலவச வைஃபை வசதி

சென்னை: ஆக.13-

சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: முதல்வரின் உத்தரவுப்படி சென்னையில் மக்கள் அதிகம் வந்து செல்லும் கடற்கரை பகுதிகள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக்களில் மக்கள் தங்குதடையின்றி இணைய பயன்பாட்டை மேற்கொள்ளும் விதமாக உயர்தரத்தில் இலவச வைஃபை வசதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



அதன்படி முதல்கட்டமாக மாநகராட்சிக்கு உட்பட்ட மெரினா கடற்கரை பகுதியில் உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை 27 இடங்களிலும், பெசன்ட் நகர் கடற்கரை பகுதியில் 5 இடங்களிலும், தலைமைச் செயலக பூங்காவில் 12 இடங்களிலும் என மொத்தம் 44 இடங்களில் திங்கட்கிழமை முதல் இலவச வைஃபை வசதி பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த சேவையை பயன்படுத்த பொதுமக்கள் தங்களது செல்போனில் வைஃபையை ஆன் செய்து, ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள க்யூஆர் கோட்ஐ ஸ்கேன் செய்ய வேண்டும்.

அதன் மூலம் வரும் ஓடிபி எண்ணை பதிவு செய்து வைஃபை வசதியை பெற்றுக்கொள்ளலாம். மக்கள் இதனை இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பாடியநல்லூரில் ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் சார்பில் 12ஆம் ஆண்டு திரைப்பட இன்னிசை கச்சேரி நிகழ்ச்சி

மாதவரம், ஆக.13-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய 84ஆம் ஆண்டு தீமிதி திருவிழாவை முன்னிட்டு ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் சார்பில் 12ஆம் ஆண்டு வெற்றிப் படைப்பாக திலீப் வழங்கிய சசி ரிதம்ஸ் திரைப்பட இன்னிசை கச்சேரி நிகழ்ச்சி ஜீவா மற்றும் நண்பர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக ஆலய நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் ஆலய பொறுப்பாளர்கள், ரியல் பிரண்ட்ஸ் ஸ்போர்ட்டிங் கிளப் நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.



■ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே,புதிய மருத்துவ காப்பீடு திட்ட குறைபாடுகளை களையக் கோரி ஓய்வுபெற்றோர் ஆர்ப்பாட்டம்! சந்தா தொகையை 644ல் இருந்து 390 ஆக குறைக்க வலியுறுத்தல் ஓய்வூதியர்களுக்கு காசில்லா மருத்துவம் வழங்க கோரிக்கை கிருஷ்ணகிரியில் கண்டன கோஷங்களுடன் நடைபெற்ற போராட்டம்



## கிராண்ட்லையன் கிராமம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், ஆக.13-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சியில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் 26ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா ஆலய அறங்காவலர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், அலகுபானை எடுத்தல்,அக்னி கப்பறை எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.அதேபோல் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அன்னதானம், வழங்கினர். இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

## ஆடி அமாவாசையை முன்னிட்டு தென்பெண்ணையாற்றில் முன்னோர்களுக்கு தர்ப்பணம்



கிருஷ்ணகிரி, ஆக.13-

ஆடி அமாவாசையை முன்னிட்டு தென்பெண்ணை ஆற்றில் ஏராளமானவர்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்.

ஆடி அமாவாசை ஆடி அமாவாசை நாளில், நம்முடன் வாழ்ந்து மறைந்த முன்னோர்கள் பித்ரு லோகத்தில் இருந்து கிளம்பி பூலோகத்திற்கு வருவதாக நம்பப்படுகிறது. எனவே நம்முடைய முன்னோர்களை வரவேற்கும் விதமாக, நாம் எள்ளும், தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் அளிப்பதன் மூலம் தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

அமாவாசை தினத்தில் முன்னோர்களையும் தாய், தந்தையர்களையும் யார் வழிபடுகிறார்களோ, அவர்களின் பிள்ளைகளுக்கும் தலைமுறைக்கும் முன்னோர்களின் ஆசி கிடைக்கும். இதனால் ஆடி அமாவாசை தினம் தர்ப்பணம் செய்வதற்கு உகந்த நாளாக கருதப்படுகிறது. தர்ப்பணம் செய்து வழிபாடு: அதன்படி இன்று ஆடி அமாவாசை என்பதால், கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே தென்பெண்ணை ஆற்றில் புனித நீராடிவிட்டு, கரையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர். மேலும் கிருஷ்ணகிரி கே ஆர் பி அணை, பென்னேஸ்வர மடம் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் உள்ளிட்ட பகுதிகளிலும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். இதில், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் வந்து முன்னோர்களை நினைத்து வழிபட்டு தர்ப்பணம் செய்தனர்.

தொடர்ந்து வீடுகளில் முன்னோர்களின் படத்தை மலர்களால் அலங்கரித்து பூஜை செய்து வழிபட்டனர். இதே போல், மாவட்டத்தில் உள்ள பல்வேறு நீர் நிலைகளில் ஏராளமான பொதுமக்கள் தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபட்டனர். மேலும் பசு மாடுகளுக்கு அகத்திக் கீரையை வழங்கி வழிபட்டனர்.

## உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு உறுதி : மொழியினை மருத்துவர்கள் நர்சிங் மாணவ மாணவியர்கள் எடுத்து கொண்டனர்

நீலகிரி, ஆக.13-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டார்.

மேலும், நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில், போதைப் பொருள்கள் இல்லாத தமிழ்நாடு DRUG FREE TAMIL NADU மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழியினை அரசு மருத்துவக் கல்லூரி, நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள், அரசு அலுவலர்கள், தன்னார்வலர்கள் உட்பட 1000த்திற்கும் மேற்பட்டோர் எடுத்துக்கொண்டனர்.



அதனை தொடர்ந்து, போதை பொருட்கள் பயன்பாட்டினை குறைத்திட விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளை ஊக்குவிக்கும் வகையில், தேர்வு செய்யப்பட்ட போதை பொருள் எதிர்ப்பு மன்றங்களான முதல் பரிசு பெற்ற புனித ஜோசப் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.15,000/இரண்டாம் பரிசு பெற்ற பிதர்காடு அரசு மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.10,000/மற்றும் மூன்றாம் பரிசு பெற்ற ஓவேலி அரசு மேல்நிலைப்பள்ளி ரூ.5,000/ ஊக்கத்தொகை மற்றும் நினைவு பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், தனியார் துறை நிறுவனங்கள், தேயிலை தோட்ட தொழிலாளர்கள் ஆகியோர் போதை பொருள் எதிர்ப்பு உறுதி மொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வின் மாவட்ட போது, காவல் கண்காணிப்பாளர் பிருந்தா, மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் ஸ்ரீனிவாசன், உதகை வருவாய் கோட்டாட்சியர் தடினு அரவிந்த், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.ராஜசேகர், உதவி ஆணையர் (கலால்) திரு.மாதேஷ்வரன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுக்கரசு, இருப்பிட மருத்துவர் ரவிசங்கர், உதகை வட்டாட்சியர் சதீஷ்வர நாயக், கலால் பிரிவு தலைமை பொறுப்பாளர் திரு.சிவக்குமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

தேனி ஆக.13-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு (Drug Free Tamilnadu) மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மற்றும் விருதுகள் வழங்கும் விழா சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரிகள் அளவிலான மாணவ மாணவியர்கள் பங்கேற்கும் வகையில் காணொளிக்காட்சி மூலம் இவ்விழா நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்ற போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்வினை முன்னிட்டு, தேனி மாவட்டம், தேனி நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.எஸ்.பிரவின் கௌதம். ஆகியோர் முன்னிலையில் சுமார் 2000க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் உட்பட பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்று போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர்.ப. ராஜகுமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) .வீராச்சாமி, கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள். கலைக்கதிரவன்,மகேஷ், துணைக் காவல் கண்காணிப்பாளர் (பெரியகுளம்) நல்லு, வருவாய் கோட்டாட்சியர் (பெரியகுளம்) (பொ) கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன்மாவட்ட மேலாளர் (டாஸ்மாக்) லெட்சுமி, கல்லூரி முனைவர்.சித்ரா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட கலர் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பாக உதகை எமரால்டு பெண்கள் கல்லூரியில் மது மற்றும் போதை தொடர்பாக இன்றைய இளைஞர்கள் மத்தியில் எவ்விதமான பாதிப்புகள் ஏற்படுகிறது என்றும் மொபைலுக்கு அடிமை ஆகுதல் குறித்தும் குழந்தை திருமணம் குறித்த விழிப்புணர்வும் மற்றும் கல்வியின் முக்கியத்துவம் எதிர்கால திட்டங்கள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது






## போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உருவாக்குவோம்" போதைப் பொருள்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி முகாம்

தேனி ஆக.13-

தேனி மாவட்ட காவல்துறையினர் இருசக்கர வாகன பேரணி நிகழ்ச்சியில்

போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு "போதை இல்லாத தமிழ்நாடு உருவாக்குவோம்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய், வலியுறுத்தியதை தொடர்ந்து தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம் , போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கும் இளைஞர்களுக்கும் எடுத்துரைக்கும் வகையில் மாபெரும் காவல்துறையினர் கலந்து கொண்ட இருசக்கர வாகன பேரணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ,உட்கோட்ட காவல் அதிகாரிகள் கலந்து கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.





## பெரியகுளம் தாலுகா தாமரைக் குளம் பேரூராட்சியில் பொதுப் பாதை ஆக்கிரமிப்பு !

### வீடு கட்டி வருவதாக புகார்

பெரியகுளம் ஆக.13-


தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தாமரைகுளம் பேரூராட்சியில் வார்டு எண் 13,அன்னை தெரசா தெருவில் பொதுப்பாதையை ஆக்கிரபிப்பு செய்து தனி நபர் வீடு கட்டி வருவதா புகார், எழுந்த நிலையில்தாமரைக்குளம் பேரூராட்சி நிர்வாகத்தில் செயல் அலுவலர் முன்னிலையில் சர்வேயர்,காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் தலைமையில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தினர்அதன் பிறகு அரசு ஆணையை மதிக்காமல் பேரூராட்சி நிர்வாகத்தையும் மதிக்காமல் அப்பகுதியில் வசிக்கும் சிலர் தூண்டுதலின் பேரில் லட்சுமி என்ற தனிநபர் மீண்டும் பொதுப் பாதை ஆக்கிரப்பு செய்து கட்டிடத்தை கட்டியுள்ளார் இதனால் அப்பகுதியில் வசிக்கக் கூடிய பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்,உயர்நீதிமன்ற தீர்ப்பையும் மதிக்காமல், அரசு அதிகாரிகளையும் காவல்துறை அதிகாரிகளையும் மதிக்காமல்தனி நபர் ஒருவர்என்னை கேட்பதற்கு இப்பகுதியில் யார் இருக்கார் என்ற கர்வத்தோடு செயல்படும் இவர் மீது பேரூராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் காவல்துறை நிர்வாகமும் சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமா என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்,



## குன்னூர் காட்டேரி பூங்காவில் இரண்டாம் பருவத்திற்கான மலர்செடிகள் நடவு செய்யும் பணி துவங்கியது

நீலகிரி, ஆக.13-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே தோட்டக்கலைத் துறையின் கீழ் இயங்கும் காட்டேரி பூங்காவில் இந்தாண்டு இரண்டாம் பருவத்திற்கான மலர்ச் செடிகள் நடவுப் பணியினை நீலகிரி மாவட்டம். தோட்டக்கலை இணை இயக்குநர் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. நடவு பணியை முன்னிட்டு மேரிகோல்டு குட்டை ரகம் (பிரெஞ்சு மற்றும் ஆப்பிரிக்க வகை), பிளாக்ஸ், சூரியகாந்தி, ஆன்டிரினம், பெட்டுனியா, பால்சம், பெகோனியா, சால்வியா, குட்டை ரக சால்வியா, ஆஸ்டர், ஜினியா, வெர்பினா மற்றும் டேலியா என 30 வகை மலர் விதைகள் ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, கொல்கத்தா, காஷ்மீர், போன்ற இடங்களிலிருந்து பெறப்பட்டு நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு சுமார் 2.400 இலட்சம் நாற்றுக்கள் நடவு செய்யப்பட உள்ளன. இந்த மலர்கள் அனைத்தும் செப்டம்பர் மூன்றாவது வாரத்தில் இருந்து பூத்து குலுங்கும். கடந்த வருடம் 98,887 சுற்றுலா பயணிகள் காட்டேரி பூங்காவிற்கு வருகைப் புரிந்துள்ளனர். 2026 2027ம் ஆண்டில் இதுவரை 54,844 சுற்றுலா பயணிகள் காட்டேரி பூங்காவிற்கு வருகைப் புரிந்துள்ளனர். இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலை அலுவலர், மா.ஜெய பிரகாஷ், உதவி தோட்டக்கலை அலுவலர், வி.கீதா மற்றும் பண்ணை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



## பாடியநல்லூர் கிராமம் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம், ஆக.13-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சியில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 84ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் பிரகாசம், முனுசாமி, விஜயரங்கம், ஜானகிராமன், ராஜா, ஏகாம்பரம், சுரேஷ், கோவிந்தராஜ், சுப்பிரமணி, சரவணன், எல்லையப்பன், செல்வம், சுரேந்தர், செல்வம் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், அலகுபானை எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.அதேபோல் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அன்னதானம், இன்னிசை கச்சேரி மற்றும் குளிர்பானங்கள் வழங்கினர். இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.

## விஜய் சேதுபதி பாலாஜி தரணிதரன் மீண்டும் இணையும் 'பத்தா' அக்.1ல் ரிலீஸ்!

விஜய் சேதுபதி பாலாஜி தரணிதரன் கூட்டணி மீண்டும் இணையும் 'பத்தா' படத்தின் முதல் தோற்றம் இன்று வெளியானது.

'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் பாலாஜி தரணிதரன். தொடர்ந்து தனது அடுத்த படமான 'சீதக்காதி'யிலும் விஜய் சேதுபதியை இயக்கி இருந்தார். தற்போது மூன்றாவது முறையாக இந்தக் கூட்டணி இணைகிறது. 'பத்தா' என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் படத்தை இயக்குநர் அட்லி தயாரித்து வெளியிடுகிறார்.



படம் குறித்த தகவலையும் அதன் முதல் தோற்றம் மற்றும் வெளியீட்டு தேதியையும் அட்லி தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அட்லி தனது பதிவில், 'கேடவுன் ஹிஸ்ட்ரில கொஞ்சம் பக்கத்தை ஸ்கிப் பண்ணாம பார்த்தா, இந்தக் கூட்டணி மூன்றாவது முறையாக இணையும்போது, அந்தப் படைப்பு அதிரடியானதா இருக்கும் என்பது உங்களுக்கு புரியும். 'பத்தா' அக்டோபர் 1ல் திரையரங்குகளில் உங்களைச் சந்திப்பான்' என்று தெரிவித்துள்ளார்.

படத்தின் முதல் தோற்ற போஸ்டரில் வின்டேஜ் லுக்கில் இருக்கும் விஜய் சேதுபதியின் உதட்டில் ஒரு பீடி புகைந்து கொண்டிருக்கிறது.

சினி 1 ஸ்டுடியோவுடன் இணைந்து ஏ ஃபார் ஆப்பில் ஸ்டுடியோஸ் மூலமாக ப்ரியா அட்லி தயாரிக்க இருக்கும் இந்தப் படத்துக்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார். படத்தின் ஒளிப்பதிவை செல்வகுமார் எஸ்கேவும், படத்தொகுப்பு பணியை கலைவண்ணனும் மேற்கொள்கின்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட சைபர் கிரைம் போலீஸார் சார்பில் குருபரப்பள்ளியில் விழிப்புணர்வு பேரணி நடந்தது. இப்பேரணியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ். அனிதா தொடங்கி வைத்தார். போலி அழைப்புகள், லிங்குகள் மூலம் பணம் பறிப்புக்கு எச்சரிக்கை சைபர் குற்றங்கள் குறித்து 1930ல் உடனடியாக புகார் அளிக்க அறிவுறுத்தல் 500 க்கும் மேற்பட்ட மாணவர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் பங்கேற்பு.



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பொன்னேரி ஊராட்சியில் பாரத கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் (VB GRAMG) கீழ் சமுதாய நீர் சேகரிப்பு குளம் (30x30M) வெட்டும் பணியானது முன் அளவீடு செய்யப்பட்டு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்2, பீ.பீ.குளம் ரவுண்டான அருகில் தூய்மைப்பணிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் சுகாதார அலுவலர்ராஜ்கண்ணன் உடனிருந்தார்.



■ கிருஷ்ணகிரியில் 21 டன் புகையிலை பொருட்கள் தீயிட்டு அழிப்பு! மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், எஸ்.பி., அனிதா முன்னிலையில் நேற்று புகையிலை பொருட்கள் அழிக்கப்பட்டன. குட்கா விற்றால் 1 லட்சம் வரை அபராதம் ரு கடைக்கு நிரந்தர 'சீல்' கடத்தலை தடுக்க 9 நிரந்தர, 6 தற்காலிக சோதனைச்சாவடிகளில் கண்காணிப்பு.



## புழல் கதிர்வேடு ஸ்ரீகெங்கையம்மன் நாகாத்தம்மன் ஆலயத்தில் ஆடிமாத திருவிழா

மாதவரம், ஆக.13-

சென்னை புழல் கதிர்வேடு பஜனை கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் நாகாத்தம்மன் ஆலயத்தில் 23ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மறைந்த முன்னாள் புழல் ஒன்றிய குழு பெருந்தலைவரும் ஆலய தர்மகர்தாவான பர்ணபாஸ், முன்னாள் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வதனாபர்ணபாஸ் குடும்பத்தினர்கள் சென்னை மாநகராட்சி 23வது மாமன்ற உறுப்பினர் ராஜன்பர்ணபாஸ், 31வது மாமன்ற உறுப்பினர் சங்கீதா பாபு மற்றும் பிரேமலதாராஜன், தர்மலிங்கம், லட்சுமி தர்மலிங்கம், பாபு, கர்ணன், சவிதாகர்ணன் ஆகியோர் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் காப்புக்கட்டுதல்,பால்குடம் எடுத்தல், அம்மனுக்கு பால் உட்பட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர். இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

## காவேரிப்பட்டினம் அருகே பிள்ளையார் கோயிலூர் மாரியம்மன் கோயிலில் வெகு விமரிசையாக நடைபெற்ற கூழ் ஊற்றும் விழா

கிருஷ்ணகிரி, ஆக.13-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஒன்றியம் கால்வேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பிள்ளையார் கோயிலூர் கிராமத்தில் அருள்மிகு மாரியம்மன் கோயில் கூழ் ஊற்றும் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.



இதையொட்டி, மாரியம் மனுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் நடைபெற்றது. தொடர்ந்து, பெண்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கேழ்வரகு கூழை குடங்களில் தலையில் சுமந்தபடி, மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர். பின்னர், கூழை அம்மனுக்கு படைத்து சிறப்பு வழிபாடு செய்தனர்.

இவ்விழாவில் பிள்ளையார் கோயிலூர், காவாப்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 3,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு மாரியம்மனை தரிசனம் செய்து வழிபட்டனர்.

மேலும், விழாவின் தொடர்ச்சியாக இன்று (புதன்கிழமை) மதியம் 2 மணிக்கு மேல் பெண்கள் பங்கேற்கும் மாவிளக்கு ஊர்வலம் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு மாவிளக்கு ஏந்தி ஊர்வலமாக வந்து அம்மனை வழிபட உள்ளனர். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் கவுண்டர்கள், ஊர் பெரியவர்கள், பொதுமக்கள் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

விழாவையொட்டி பிள்ளையார் கோயிலூர் கிராமம் முழுவதும் பக்தி மயமாக காட்சியளித்தது.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் 10 மற்றும் 12ஆம் வகுப்புபொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாதமாணவர்களுக்கான உயர்கல்வி சேர்க்கை சிறப்பு முகாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது

தேனி ஆக.13-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புபொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாதமாணவர்களுக்கான உயர்கல்வி சேர்க்கை சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர்தெரிவித்ததாவது, கல்வியின் முக்கியத்துவம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சி சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் கல்வி கற்பதற்கு பொருளாதாரம் ஒருபோதும் தடையாக ஒருபோதும் இருந்துவிடக்கூடாது என்பதற்காக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு முன்முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.ஆகையால் ஒவ்வொரு மாணவர்களும் தொடர்ந்து பள்ளிக்கல்வி பயின்று பிறகு இடைவிடாமல் உயர் கல்வியும் பயின்றுவாழ்க்கையில் ஒரு உயர்ந்த இடத்திற்கு வரவேண்டும். மாணவர்களாகிய நீங்கள் கல்வி கற்பதற்குதேவையான



அனைத்து உதவிகளையும் செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். எனவே இன்றையதினம் இங்கு வருகை தந்துள்ள 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது கல்வித்தகுதி மற்றும் விருப்பத்திற்கேற்ப உயர்கல்வியைத் தேர்வுசெய்து, கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற வேண்டும். மேலும், தேர்ச்சி பெறாத மாணவர்கள் மனம் தளராமல், துணைத்தேர்வு, திறந்தநிலைக் கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட மாற்று கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்தி தங்களது கல்வியைத் தொடர்ந்து பயில வேண்டும்.

மாணவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்பை கருத்தில்

கொண்டு, உரிய உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் அரசின் கல்வி உதவித்திட்டங்கள் குறித்தும் இச்சிறப்பு முகாமில் எடுத்துரைக்கப்படும். எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இவ்வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொண்டு, தங்களது எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

மேலும், மாணவர்களுக்கு உயர்கல்வி சேர்க்கை தொடர்பான சந்தேகங்களுக்கு உரிய விளக்கங்கள் வழங்குவதுடன், அவர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் பொருத்தமான உயர்கல்வி வாய்ப்புகளைத் தேர்வு செய்ய உயர்கல்வி பயிலுவதன் அவசியம் குறித்து உரிய ஆலோசனைகள் வழங்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இம்முகாமில் பல்வேறு கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் ஐடிஐ சார்பில் உதவி மையம் (Help Desk) அமைக்கப்பட்டு, அக்கல்லூரிகளில் வழங்கப்படும் பல்வேறு பாடப்பிரிவுகள், பாடத்திட்டங்கள், சேர்க்கை நடைமுறைகள் மற்றும் அப்பாடப்பிரிவுகளின் மூலம் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, 102 மாணவர்கள் உயர்கல்வி பயிலுவதற்கான நேரடி சேர்க்கை நடைபெற்றது.

இம்முகாமில் முதன்மைக் கல்வி அலுவலர்.முருகன், முன்னோடி வங்கி மேலாளர்.நேதாஜி மற்றும் பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செல்வ வளத்தை அதிகரிக்கும் அர்ச்சனை



செல்வ வளத்தை அதிகரிக்க வழிபாடு ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மிகப்பெரிய முன்னேற்றம் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய செல்வ வளம் தான். அப்படியே இருந்தால் அது கரைந்து விடும் அல்லவா? அவ்வப்பொழுது அந்த செல்வ வளம் அதிகரித்துக் கொண்டே இருந்தால்தான் நம்முடைய செலவிற்கு மிஞ்சிய செல்வ வளத்தை பெற முடியும். அப்படி செல்வ வளம் அதிகரிப்பதற்கு மகாலட்சுமி தாயாரை வழிபாடு செய்ய வேண்டும். மகாலட்சுமி தாயாரை பலவிதமான முறையில் வழிபாடு செய்தாலும் இந்த சூட்சமமான முறைப்படி அர்ச்சனை செய்து வழிபாடு செய்ய மகாலட்சுமி கடாட்சத்தை பெற முடியும்.



இந்த வழிபாட்டை ஒவ்வொரு மாதத்திலும் வரக்கூடிய பௌர்ணமி அமாவாசை போன்ற தினங்களில் செய்யலாம் அல்லது வாராவாரம் வரக்கூடிய வெள்ளிக்கிழமை சுக்கிர ஹோரையில் செய்யலாம் அல்லது சுப முகூர்த்த நாளாக பார்த்து தேர்வு செய்து தொடர்ச்சியாக 48 நாட்கள் இந்த வழிபாட்டை செய்யலாம். இந்த வழிபாட்டை செய்வதற்கு நமக்கு 108 எண்ணிக்கையில் ஒரு ரூபாய் நாணயங்கள் வேண்டும். இதோடு மாதுளம் பழ முத்துக்களும் வேண்டும். பிரம்ம முகூர்த்த நேரத்திலோ அல்லது மாலை 6:00 மணிக்கோ இந்த வழிபாட்டை செய்ய வேண்டும். நம்முடைய வீட்டில் கண்டிப்பாக முறையில் மகாலட்சுமியின் படம் என்பது இருக்கும். அந்த படத்தை சுத்தம் செய்து சந்தனம் குங்குமம் வைத்துக் கொள்ளுங்கள். மகாலட்சுமிக்கு முன்பாக ஒரு நெய் தீபத்தை ஏற்றி வைத்துக் கொள்ளுங்கள். வாசனை மிகுந்த ஊதுபத்தி சாம்பிராணியை பொருத்தி வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது ஒரு ஒரு ரூபாய் நாணயத்தையும் ஒரு மாதுளம் பழ முத்தையும் எடுத்து "ஓம் ஸ்ரீம் ஸ்ரீயை நமஹ" என்னும் மந்திரத்தை கூறி மகாலட்சுமிக்கு அர்ச்சனை செய்ய வேண்டும்.






■ திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆலங்காயம் உள்வட்டம், நாயக்கனூர் கிராமத்திலுள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபகழகம் செயல்முறை கிடங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப.,தலைமையில் (12.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன், ஆலங்காயம் ஒன்றியக் குழு தலைவர் சங்கீதா பாரி, வாணியம்பாடி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், வேளாண்மை இணை இயக்குநர் மணி, தோட்டக்கலை துணை இயக்குநர் தீபா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இளவரசன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், உதவி இயக்குநர் ஊராட்சிகள் முருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு. நா.கலுசிவலிங்கம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கஸ்தூரி, மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர் ராமமூர்த்தி, ஊராட்சி மன்றத்தலைவர் மேகலா திருப்பதி, துணைத் தலைவர் தமிழ்ச்செல்வி ஜோதிலிங்கம், வட்டாட்சியர் சுதாகர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



■ சிவகங்கை மாவட்ட ஏரியா கமாண்டராக செந்தில்குமார் நியமனம் காரைக்குடியைச் சேர்ந்த செந்தில்குமார், சிவகங்கை மாவட்ட போலீஸ் சர்ஜனாகப் பணியாற்றி வருகிறார். அவருக்கு சிவகங்கை மாவட்ட ஏரியா கமாண்டராகக் கூடுதல் பொறுப்பைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. புதிய பொறுப்பேற்ற செந்தில்குமாருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா வாழ்த்து தெரிவித்தார்.

## திருப்பரங்குன்றம் அரசுப் பள்ளியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு!





மதுரை, ஆக.13-

மதுரை மாநகர காவல் ஆணையர் ராஜேந்திரன் ஐபிஎஸ் உத்தரவின்படி, துணை ஆணையர் வனிதா மேற்பார்வையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் அ.தங்கமணி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, போதைப்பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தார்.




சார்பு ஆய்வாளர் தார்ச்சுஸ், சிறப்பு சார்பு ஆய்வாளர் அன்பு, தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்.

## சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரதினத்தன்று கிராம சபைக் கூட்டம்

சிவகங்கை, ஆக.13-

சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரதினம்(15.08.2026) அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையை பின்பற்றி 15.08.2026 சுதந்திரதினத்தன்று காலை 11.00 மணியளவில் அரசாணை (நிலை) எண் 130 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்:25.09.2006 ல் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண் வரம்பின்படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

அன்றைய கிராம சபைக் கூட்டத்தில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 15.08.2026 சுதந்திரதினத்தன்று காலை 11.00 மணி அளவில் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட்டு அவ்வூராட்சியில் சுதந்திரதினத்தின் கருப்பொருளினை பற்றி விவாதிக்கவும், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்து விவாதித்தல், தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தொழிலாளர் வரவுசெலவு திட்டம்




ஜீன் 30, 2026ம் தேதி வரையிலான முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பிட்டு விவாதித்தல், 20262027 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து விவாதித்தல், சிறுபாசன குளங்கள் மற்றும் ஏரிகள் புதுப்பித்தல்,ஜல் ஜீவன் திட்டம், மற்றும் தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம் ஆகிய கூட்டப்பொருட்கள் விவாதிக்கப்படவுள்ளது.

எனவே,15.08.2026 சுதந்திர தினத்தன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பொதுமக்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தெரிவித்துள்ளார்.



■ மதுரை மாநகராட்சி, மண்டலம்2, வார்டு 28 பகுதியில் பந்தல்குடி வாய்க்காலில் இருபுறமும் சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## மானாமதுரை அருகே இருவருக்கு அரிவாள் வெட்டு : முக்கிய குற்றவாளி கைது

மானாமதுரை, ஆக.13-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தே.புதுக்கோட்டை பகுதியில் இன்று (12.08.2026) அதிகாலை மர்ம நபர்கள் அரிவாளால் தாக்கியதில் இருவர் காயமடைந்தனர்.

தகவலறிந்த சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, காயமடைந்தவர்களிடம் நேரில் விசாரணை மேற்கொண்டார். இதுதொடர்பாக மானாமதுரை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

சம்பவப் பகுதியில் பதிவான சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த காவல்துறையினர், முக்கிய குற்றவாளியான நிதிஷ்குமாரைக் கைது செய்தனர். மேலும், இச்சம்பவத்தில் தொடர்புடைய மற்றவர்களை விரைந்து கைது செய்ய 5 தனிப்படைகள் அமைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார்.

## "அறம் வழியில் வாழ்வதே உண்மையான இன்பம் : மதுரையில் சங்க இலக்கிய சிறப்பு நிகழ்ச்சி

மதுரை, ஆக.13-

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரையின் கீழ் செயல்படும் சங்கத் தமிழ்க் கூடத்தில், "சங்க இலக்கியத்தில் அறம்" என்ற தலைப்பில் 5வது நிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரை இலக்கியப் பேரவையின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் சண்முக திருக்குமரன் சிறப்புரையாற்றினார். சங்க இலக்கியங்களில் அறம் என்பது நல்லொழுக்கம், நேர்மை, நீதி, இரக்கம் மற்றும் பிறருக்கு உதவும் மனப்பான்மை ஆகியவற்றை உள்ளடக்கியது என அவர் விளக்கினார்.

அறத்தின் வழியில் வாழ்வதன் மூலம் கிடைக்கும் இன்பமே உண்மையான இன்பம் என்பதை






வள்ளுவம் எடுத்துரைப்பதாகவும், சங்க இலக்கியங்களில் அறம், நட்பு உள்ளிட்ட உயரிய பண்புகள் போற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியை சங்கத் தமிழ்க் கூடல் விளக்குநர் திருமதி ரெ.ஷப்னாஷ்யார் ஒருங்கிணைத்தார். இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளையின் நிறுவனர் திரு. செல்வம் ராமசாமி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

மதுரை திரு.வி.க. மேல்நிலைப்பள்ளி மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் அறிஞர்கள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## பழனியில் 150 கோடி மதிப்பிலான கௌமார மடாலய நிலம் ஆக்கிரமிப்பு? - 99 ஆண்டு குத்தகையை ரத்து செய்ய பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் கருப்பசாமி நீதிமன்றத்தில் வழக்கு

திண்டுக்கல், ஆக.13-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கௌமார மடாலயத்திற்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த ஆக்கிரமிப் புகளை உடனடியாக அகற்றி, 99 ஆண்டுகால குத்தகையை ரத்து செய்யக் கோரி பாரதிய ஜனதா கட்சி சார்பில் அறநிலையத்துறை அதிகாரிகளிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலத்தின் குத்தகை உரிமையாளரான பாலகுரு என்பவரிடமிருந்து, விதிமுறைகளுக்குப்



புறம்பாக அம்பிகா மற்றும் பிஜேபி முன்னாள் மாவட்ட தலைவர் கனகராஜின் மனைவி கலாமணி என்பவர்களுக்கு குத்தகை உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, மயில் பார்க்கிங் என்ற பெயரில் தனியார் வாகன நிறுத்துமிடம், பேக்கரி, துணிக்கடைகள் மற்றும் பேன்சி கடைகள் உள்ளிட்ட பல்வேறு வணிக நிறுவனங்கள் நடத்தப்பட்டு, சட்ட விரோதமாக வாடகை வசூலிக்கப்பட்டு வருவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. சட்டவிரோதமாக வழங்கப்பட்ட 99 ஆண்டுகால குத்தகையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். மடாலய நிலத்தில் செயல்படும் பார்க்கிங், கடைகள் உள்ளிட்ட அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக மூட வேண்டும். மீட்கப்படும் நிலத்தை வணிக நோக்கில் பயன்படுத்தாமல், பழனிக்கு வரும் முருக பக்தர்களின் வாகன நிறுத்துமிடம் மற்றும் அடிப்படை வசதிகளுக்கு மட்டுமே ஒதுக்க வேண்டும்.

அரசுக்கும் அறநிலையத்துறைக்கும் பெரும் வருவாய் இழப்பை ஏற்படுத்திய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி பாரதிய ஜனதா கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் பி. கருப்புசாமி அதிகாரிகளிடம் மனு அளித்துள்ளார். அறநிலையத்துறை நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இந்தச் சம்பவம் பழனியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கச்சூர் அருகே ஆலப்பாக்கத்தில் பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடை பள்ளி உபகரணங்கள் வழங்கும் விழா

திருவள்ளூர், ஆக.13-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் கச்சூர் அருகே ஆலப்பாக்கம் கிராமத்தில் சென்னை வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி மற்றும் முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவனம் சார்பில் 09.08.2026 அன்று காலை10 மணி அளவில் ஆலபாக்கம் இசேவை மையத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய 45 மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்க்காக இலவச சீருடை பள்ளிபேக் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முத்தமிழ் கிராம வளர்ச்சி நிறுவன செயலாளர் E.முத்தமிழ்ச்செல்வி அனைவரையும் வரவேற்றார் ஆலபாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் B.M.பிரசாத் தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக வி.வி.வி. எஜுகேஷன் சொசைட்டி தாளாளர் தன்வீர் அலிக்கான் மற்றும் செல்வி ஷெரீன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி 45 பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் சீருடை பேக் வழங்கி சிறப்பித்தார்.

சிறந்த சமூக சேவை செய்துவரும் MSRD-NGO. D.இளங்கோவன் மற்றும் தன்னார்வலர்கள் ரமா, S.சகிலாவிற்கு சிறந்த பாராட்டு சான்று வழங்கி கௌரவித்தனர் நிகழ்ச்சியின் முடிவில் தன்ஆர்வலர் C.சுகன்யா அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் மேலும் ஆலப்பாக்கம் கிராமத்தை சேர்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161